**கவனிக்க.-** 2007.06.13 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1507 - 2007 ජූලි 20 වැනි සිකුරාදා - 2007.07.20
1507 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 572 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 581 |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, யூலை 27 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, யூலை 13 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்த்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டு பிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற (தமிழ்மொழி மூலம்) பதிவாளர் பதவி - பதுளை, கொழும்பு மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற தமிழ்மொழி மூலம் பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பம் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பகாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவினுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாயும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இரு பாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விவரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை, மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2007.08.20 ஆந் திகதியன்றோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்,

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007.06.13.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலகம் | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்படவேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 1. பதுளை | பதுளை | பதுளை நகர பிரிவு பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்டச் செயலகம், பதுளை. |
| 2. பதுளை | சொறனாதொட்டை | சொறனாதொட்டை பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் வியலுவ பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்டச் செயலகம், பதுளை |
| 3. பதுளை | லுணுகலை | புட்டிப்பொலை பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் யடிகிந்த பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம் மாவட்டச் செயலகம், பதுளை. |

| மாவட்டம் | பிரதேச செயலகம் | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்படவேண்டிய முகவரி |
|---|---|---|---|
| 4. பதுளை | லுணுகலை | ஓயபலாத கிழக்கு பிரிவு பிறப்பு, இறப்பு மற்றும் வியலுவ பிரிவு விவாக (பொது) பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், பதுளை |
| 5. கொழும்பு | கொழும்பு | முகத்துவாரம் பிரிவு பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச்செயலகம், கொழும்பு. |
| 6. கொழும்பு | கொழும்பு | மருதாணை பிரிவு பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச்செயலகம், கொழும்பு. |
| 7. கொழும்பு | கொழும்பு | கொம்பனித்தெரு பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச்செயலகம், கொழும்பு. |
| 8. கொழும்பு | திம்பிரிகஸ்யாய | கொழும்பு பிரிவு வைத்தியசாலைப் பிரிவு பிறப்பு இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| 9. கொழும்பு | திம்பிரிகஸ்யாய | வெள்ளவத்தை பிரிவு, பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |
| 10. கொழும்பு | திம்பிரிகஸ்யாய | டீ சொய்சா மகளிர் வைத்திய சாலைப் பிரிவு, பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் பதவி. (தமிழ் மொழி மூலம்) | மாவட்டச் செயலாளர்/மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், கொழும்பு. |

7- 345

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

விவாக பதிவாளர் பதவி - அனுராதபுர மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவில் உள்ள விவாக பதிவாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

2. விண்ணப்பதாரர்கள் விவாக பதிவுப் பிரிவினுள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர் விவாகமானவராக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்டச் செயலாளர் அலுவலகம், காணி மாவட்டப் பதிவகம், பிரதேச செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை, கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவில் உள்ள பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின், மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மாவட்டப் பதிவக அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2007, ஆவணி மாதம் 20 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் காரியாலயம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007.06.29.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அனுராதபுரம் | மதவாச்சி | நுவரகம்பலாத்த பிரிவின் மேலதிக விவாகப் (கண்டிய பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக மாவட்ட பதிவாளர் நாயகம், மாவட்ட செயலகம், அனுராதபுரம். |

7-356

---

## சமுதாய அபிவிருத்தி சமூக அநீதி ஒழிப்பு அமைச்சு

அபிவிருத்தி உதவியாளர் பதவிகள்

கீழ்வரும் தகைமைகள் உள்ளவர்களிடமிருந்து மேற்படி 12 பதவிகளுக்கு சமுதாய அபிவிருத்தி சமூக அநீதி ஒழிப்பு அமைச்சு விண்ணப்பங்களை வரவேற்கின்றது.

பொது நிர்வாக மற்றும் மாகாண நிர்வாகக் கட்டமைப்பிற்குள். பணியாற்றுவோரின் விண்ணப்பங்கள் அந்தந்த நிர்வாக சேவை தலைவரினூடாக அனுப்பப்படல் வேண்டும்.

**நிபந்தனைகள் :**

(1) பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்கு உரித்துடையதுமாகும்.

(2) நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டது.

(3) இந்நியமனம் காலத்திற்குக் காலம் அமைச்சு தீர்மானிக்கும் நியதிகளுக்கும் ஸ்தாபனக் கோவையின் ஷரத்துகளுக்கும் அமைவானதாகும்.

(4) விண்ணப்பிப்போர் இலங்கையில் வம்சாவளி அல்லது பதிவுப் பிரஜைகளாகயிருத்தல் அவசியம்.

(5) விண்ணப்பதாரி சிறப்பான நன்நடத்தையும் ஆரோக்கியமான உடல் நிலையும் உள்ளவராயிருக்க வேண்டும்.

(6) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று விண்ணப்பதாரியின் வயது 18 க்குக் குறையாமலும் 45 வருடத்திற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஆயினும், பொது நிர்வாக அல்லது மாகாண நிர்வாக கட்டமைப்பிற்குள் அடங்கும் விண்ணப்பதாரிகளை இக்கூடிய வயதெல்லை கட்டுப்படுத்தாது.

(7) **கல்வித் தகைமைகள் :**

பல்கலைக்கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட பட்டம்,
தமிழ் மொழிமூல க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் சித்தி

(8) **மேலதிகத் தகைமைகள்**.- பதவிக்குத் தொடர்புடையதான அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ பயின்றிருத்தல், ஆறு மாதங்களுக்குக் குறையாமல் கணனி கற்கை நெறியைப் பயின்றிருத்தல், பதவிக்குத் தொடர்புடையதான துறையில் வெளிக்கள அனுபவம்.

(9) **சம்பளம்**.- பொது நிர்வாக சுற்றறிக்கை 6/2006 எம். என் 4 - ரூபா 14,850 - 185 x 10- 210 x 4 - 290 x 15 - 320 x 7 - ரூபா 24,130 (இந்த சம்பள விகிதம் III, II மற்றும் I தரங்களுக்கு ஏற்புடையனவாகும்.)

(10) **தகுதிகாண் தேர்வு**.- நியமனம் கிடைத்த நாளிலிருந்து 3 ஆண்டுகளுக்குள் மேற்படி தேர்வில் சித்தி பெற வேண்டும்.

(11) **நியமன முறை**.- நேர்முகத் தேர்வு மூலமாக.

**விண்ணப்பங்கள்**.- மேற்படி மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பம் 2007.08.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு "செயலாளர், சமுதாய அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு அமைச்சு, இலக்கம் 35A, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 8" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

யூ. ஏ. செனவிரத்ன,
செயலாளர்,
சமுதாய அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு அமைச்சு.

2007.07.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சமுதாய அபிவிருத்தி, சமூக அநீதி ஒழிப்பு அமைச்சு**

........................................................ பதவிக்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் விண்ணப்பதாரியின் பெயர் :-----

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :-----

3. முகவரி :-----

4. பிறந்த திகதி :- ஆண்டு :----- மாதம் :----- நாள் :-----

5. நீங்கள் இலங்கைப் பிரசையா? :-----
ஆம் எனில், வம்சாவளிப் பிரசையா அல்லது பதிவுப் பிரசையா ?

6. பால் :-----

7. சமூக நிலை :-----

8. குற்றவாளியென நீதிமன்றம் ஒன்றினால் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா? :-----

9. அப்படியாயின் விபரங்கள் :-----

10. கல்வித் தகைமைகள் :-----
(கல்விச் சான்றுகளின் பிரதிகள் இணைக்கவும்)

11. மேலதிகத் தகைமைகள் (கல்விச் சான்றுகளின் பிரதிகள் இணைக்கவும்) :-

(அ) :-----
(ஆ) :-----
(இ) :-----

12. நீங்கள் தற்போது பொது நிர்வாக அல்லது மாகாண நிர்வாக கட்டமைப்பிற்கு உட்பட்டவராயின், அதன் விபரங்களும், பணிபுரிந்துவரும் காலமும் :-----

*13.* **வேறு தகைமைகள் :-----**

இவ்விண்ணபத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விபரங்கள் என் அறிவுக்கெட்டியவரை உண்மையானவையென்றும், சரியானவையென்றும் உறுதிகூறுகிறேன். அத்துடன், இந்த தகவல்கள் தவறானவையென தெரியவந்தால் நியமனத்திற்கு தகுதியற்றவனாவேன் என்பதையும், நியமனம் பெற்றபின்னர் பிழையென கண்டுபிடிக்கப்பட்டால் எனது சேவையை இழக்கவேண்டிவரும் என்பதையும் நான் அறிந்துள்ளேன்.

-----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----

**(விண்ணபதாரி அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் தற்போது பணியாற்றுபவராக இருந்தால் பணியாற்றும் பிரிவின் தலைவரால் கீழ்வரும் பிரகடனம் தெரிவிக்கப்படல் வேண்டும்) : -**

திரு./ திருமதி/ செல்வி............................................இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்தில்.................................தற்போது பணியாற்றிவருவதுடன் கடந்த ஐந்து ஆண்டுகளில் தனக்குரிய வேதன உயர்வுகளைப் பெற்றுள்ளார். இவர் மீது (எச்சரிக்கைக் கடிதங்கள் தவிர்ந்த) ஒழுக்காற்று நடவடிக்கை எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இவர் நியமனத்திற்கு தெரிவுசெய்யப்படுவாராயின், தற்போதைய தொழிலிலிருந்து விடுவிக்கப்படுவார்/ விடுவிக்கப்படமாட்டார் என்றும், மேற்படி தகவல்கள் உண்மையானவை என்றும் உறுதிகூறுகிறேன்.

-----
திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைவர் அல்லது
அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பம்.

பெயர் :-----
பதவி :-----
திணைக்களம்/ நிறுவனம் :------

திகதி :-----

7- 424

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

**விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி வெற்றிடம் தொடர்பாக விண்ணப்பம் கோரும் அறிவித்தலை இரத்து செய்தல்**

என்னால் விவாக பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவிகளில் வெற்றிடம் நிரப்புவதற்காக விண்ணப்பம் கோரும் அறிவித்தலை இரத்துச்செய்தல் கீழ்க்குறிப்பிடப்பட்டவாறு வெளிப்படுத்தப்படுகிறது.

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர்களை ஆட்சேர்க்கும் புதிய திட்டத்தை (2006) நடைமுறைப்படுத்துவதற்காக விண்ணப்பம் கோருதலை இத்தால் இரத்துச் செய்கின்றேன். இது தொடர்பாக இதுவரை விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் அவர்களுக்கு பதிவுத்தபாலில் திருப்பி அனுப்பப்படும்.

வெற்றிடம் நிரப்புவதற்காக மீண்டும் தேவையேற்படின் அது தொடர்பாக வேண்டிய அறிவித்தல் வர்த்தமானி மூலம் பிரசித்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

எல். கே. ரத்னசிறி,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 280, பிரதான வீதி,
கொழும்பு 11,
2007.06.29

**அட்டவணை**

| *மாவட்டம்* | *பிரதேச செயலகம்* | *விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும்* | *விண்ணப்பம் கோரப்பட்ட வர்த்தமானி தொடர்பான விபரம்* |
|---|---|---|---|
| 1. கம்பஹா | அத்தனகல்லை | சியானே மேற்குக் கோறளைப் பிரிவின் மங்களதிரிய போகமுவ மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 2. கம்பஹா | நீர்கொழும்பு | அழுத்குரு வடக்கு கோறளைப் பிரிவின் (நீர்கொழும்பு நகர) மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 3. கம்பஹா | கல்கமுவ பிரிவின் (மீரிகம) | கல்கமுவ பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் சியனே மேற்குக் கோறளை விவாக (பொது) பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 4. கம்பஹா | கட்டான | அழுத்குரு வடக்கு கோறளைப் பிரிவின் (தடுகமபேருவே உதம்மிட்ட பிரதேச) மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 5. கம்பஹா | பியகம | சியானே மேற்கு கோறளைப் பிரிவின் (அதிகாரிபத்துவ கெய்யன்துடுவ) மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 6. கம்பஹா | பியகம | சியானே வடக்கு கோறளைப் பிரிவின் (வல்கம் பிரதேச) மேலதிக விவாக (பொது) பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 7. கம்பஹா | வத்தளை | மத்துமகல பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் அலுத்குரு வடக்கு கோறளை விவாக (பொது) பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 8. கம்பஹா | களணிய | சியானே மேற்கு பிரிவின் மற்றும் ஹுணுபிட்டிய பிரதேச விவாக (பொது) பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 9. கம்பஹா | பியகம | சியானே வடக்கு கோறளைப் பிரிவின் (வல்கம்மல்வான பிரதேச) முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 10. கம்பஹா | அத்தனகல்ல | சியானே கிழக்கு கோறளைப் பிரிவின் (ககட ஓவிட்ட பிரதேச) மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 11. கம்பஹா | களணிய | சியானே மேற்கு கோறளைப் பிரிவின் மற்றும் ஹுணுப்பிட்டிய பிரதேச முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 12. கம்பஹா | அத்தனகல்ல | சியானே கிழக்கு கோறளைப் பிரிவின் (அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவு) மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 2005.12.16 திகதிய வெள்ளிக்கிழமை 1424 ஆம் இலக்க வர்த்தமானி |
| 13. கேகாலை | றம்புக்கனை | பறணகுறு கோறளை விவாக (கண்டிய பொது) பதிவாளர் பதவி | 2005.07.22 திகதிய வெள்ளிக்கிழமை 1403 ஆம் இலக்க வர்த்தமானி |

| மாவட்டம் | பிரதேச செயலகம் | விண்ணப்பம் கோரப்பட்ட பிரிவும் பதவியும் | விண்ணப்பம் கோரப்பட்ட வர்த்தமானி தொடர்பான விபரம் |
|---|---|---|---|
| 14. கேகாலை | எட்டியாந்தோட்டை | உடுவபலாத பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கோறளை துணை மற்றும் பானபுலத்கம (கண்டிய பொது) பதிவாளர் பதவி | 2005.07.22 திகதிய வெள்ளிக்கிழமை 1403 ஆம் இலக்க வர்த்தமானி |
| 15. கேகாலை | கேகாலை | கேகாலை நகர பிரிவின் பிறப்பு, இறப்பு வைத்திய பதிவாளர் பதவி | 2005.07.22 திகதிய வெள்ளிக்கிழமை 1403 ஆம் இலக்க வர்த்தமானி |
| 16. கேகாலை | மாவனல்ல | குல்பட கீனிகொட கோறளை உயன்வத்தை மேலதிக முஸ்லிம் விவாக பதிவாளர் பதவி | 2005.07.22 திகதிய வெள்ளிக்கிழமை 1403 ஆம் இலக்க வர்த்தமானி |

7-440

---

## நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு

சலனமற்ற புகைப்படப் பிடிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் சலனமற்ற புகைப்படப் பிடிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள கோரப்படுகின்றன.

01. **தகைமைகள்.**-ஒவ்வொரு பிரசையும் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ளார் என்பதற்கான சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) நல்லொழுக்கமும் சிறந்த தேகாரோக்கியமும் கொண்டிருத்தல் ;

(ஆ) 18 வயதுக்குக் குறையாதவராவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் (ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

(இ) **கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

(i) இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் க. பொ. த. (சா.த.) பரீட்சையில் மொழி, விஞ்ஞானம், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (ஒரு அமர்வில் ஆகக் குறைந்தது 5 பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் தேசிய பொதுக் கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் மேற்குறித்த பாடங்களுக்கு ‘பி’ தரத்தின் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (ஒரு அமர்வில் ஆகக் குறைந்தது 5 பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது தொழினுட்ப கல்லூரியொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவனமொன்றிலிருந்து வழங்கப்படுகின்ற புகைப்பட கலை பற்றிய ஓராண்டுக்குக் குறையாத முழு நேர அல்லது இரண்டு வருடங்களுக்குக் குறையாத பகுதி நேர தொழிற் கற்கை நெறியொன்றை வெற்றிகரமாகக் கற்று சான்றிதழ்களைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(iv) புகைப்படப் பிடிப்பாளர் ஒருவராக 05 வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் ;

2. **சம்பளத் தொகுதியும் அளவுத் திட்டமும்.**- பொ.நி. சு. 6/2006 இன்படி- (MT-1-2006) ரூபா 14,000-10x120-11 x 140 -6x 210 - 74 x 290 - ரூபா 22,060 (III, II மற்றும் I ஆம் தரங்களுக்காக ஏற்புடையதாகிறது.)

குறிப்பு - II, I ஆம் தரங்களுக்காக வேதனங்கள், பதவியணி ஆணைக்குழுவின் மூலம் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொடுக்கும் வரை III ஆம் தரத்திற்கு ஏற்புடையதான ரூபா 14,000 - 10 x 120 - ரூபா 15,200 சம்பள அளவுத்திட்டத்தின் மீது ஆட்சேர்ப்பு செய்யப்படுகிறது.

3. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுரித்துடையதுமாகும். விதவை, தபுதாரர், அநாதைப் பிள்ளைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்த வேண்டும்.

4. தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 முதல் 12 பந்திகளின் ஏற்பாடுகளும் ஏற்புடையதாகின்றன.

5. **தெரிவு செய்தல்.**- அமைப்பு முறையான நேர்முகப் பரீட்சை மற்றும் செய்முறைப் பரீட்சையொன்றின் மூலம் தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

6. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயார் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "செயலாளர், நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு, 'மீயுயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி', கொழும்பு 12" என்னும் முகவரிக்கு 2007.07.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். 2007.07.31 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "புகைப்படப்பிடிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

7. அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவைகளில் உள்ள விண்ணப்பதாரர்கள் அவர்களது திணைக்களத் தலைவர்களினூடாக தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

8. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எவையேனும் பொய்யானவை என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் தெரியவருமிடத்து விண்ணப்பதாரரின் பரீட்சார்த்தித் தன்மை இரத்துச் செய்யப்படும். ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் அத்தகைய பொய்யான தகவல் தெரியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

சுகத கே. கமலத்,
செயலாளர்,
நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர்.

நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு,
மீயுயர் நீதிமன்ற கட்டிடத் தொகுதி,
கொழும்பு 12.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சு**

*சலனமற்ற புகைப்படப்பிடிப்பாளர் கருவியாளர் பதவி*

01. (அ) பெயர் (முதலெழுத்துக்களுடன்) :-----.

(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----.

(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.

2. முகவரி :-

(அ) சொந்த முகவரி :-----.
(ஆ) அலுவலக முகவரி (ஏற்புடையதாயின்) :-----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

4. பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

5. 2007.07.31 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

6. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :-----.

7. (அ) கல்வித் தகைமைகள் :-

| பரீட்சையின் பெயர் | ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் | சித்தி |
|---|---|---|---|
| | | | |

(ஆ) பிற தகைமைகள் (புகைப்படங்கள் பற்றிய நிபுணத்துவம்) :-----.

(இ) தொழில் அனுபவம் :-

| நிறுவனம் | சேவைக்காலம் | |
|---|---|---|
| | இருந்து-வரை | காலப்பகுதி |
| | | |

8. இதற்கு முன்னர் அரசாங்க திணைக்களமொன்றில்/கூட்டுத்தாபனமொன்றில் சேவையில் ஈடுபட்டிருந்தால் விலகுவதற்கான காரணம் :-----.

9. குற்றவியல் தவறொன்றுக்கு நீதிமன்றத்தால் தவறாளராக்கப்பட்டிருப்பின் அத்தவறு மற்றும் தண்டனை பற்றிய விபரம் :-----.

10. இவ்விண்ணபத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலுள்ள தகவல்கள் எவையேனும் பொய்யானவை அல்லது தவறானவை என நான் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படுமெனவும், தெரிவுக்குப் பின்னர் தெரியவருமிடத்து சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு நான் ஆளாவேன் எனவும் நானறிவேன்.

............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**(பகுதி ஆ)**

(அரசாங்க/மாகாண சபை/ நிறுவனத் தலைவரின் சிபார்சு)

இவ்விண்ணபத்தைச் சமர்ப்பிக்கும் திரு. /திருமதி/ செல்வி ................. இவ்வமைச்சில்/திணைக்களத்தில்/மாகாண சபை அலுவலகத்தில் சேவை செய்கின்றார் என்றும், மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என்றும் அவரது வேலைகள், வருகை மற்றும் நடத்தை திருப்திகரமானது என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். அவர் இப்பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/ முடியாது.

.....................................................................................................................
நிறுவனத் தலைவரின்/அதிகாரம் பெற்ற அலுவலரின்
கையொப்பமும் அலுவலக முத்திரையும்.

பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

7-441

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2006

மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவையில் உள்ள உத்தியோகத்தர் களுக்கான வினைத்திறமைகாண் பரீட்சைகள் 2007 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் பேராதனையில் ஆரம்பிப்பது என்று எதிர்பார்க்கப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதியன்று கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் இரண்டுக்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடத்திட்டம்**.- முதலாம், இரண்டாம் வினைத்திறமைகாண் தடைகள் நிர்வகிக்கின்ற பாடவிதானம் பத்திரம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் சேவை யாப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவையில் உத்தியோகத்தர்களினுடைய வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை 1 பாடத் திட்ட இணைப்பு 'அ' விலும் இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சைக்குரிய பாடத்திட்டம் 'ஆ' விலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வினைத்திறமைகாண் பரீட்சை விடயங்களின் பொருட்டு பரீட்சைக்கு ஒரு தடவைக்கு மேல் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

4. இச்சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்கள் வினைத் திறமைகாண் தடைப்பரீட்சைக்கு தோற்ற வேண்டிய பாடங்கள் பின்வருமாறு :-

### இலங்கை கால்நடை உற்பத்தி, சுகாதார சேவை

*1 ஆவது வினைத்திறமைகாண் பரீட்சை :*

| பாட இல. | விடயம் | காலம் (மணி) |
|---|---|---|
| 1 | நிதி முறைகள் | 03 |
| 2 | நிருவாகம் | 03 |
| 3 | திணைக்கள பிரமாணம் வினாப்பத்திரம் 01 | 02 |
| 4 | திணைக்கள பிரமாணம் வினாப்பத்திரம் 02 | 03 |
| 5 | விசேட பத்திரம்* | 03 |

*2 ஆவது வினைத்திறமைகாண் பரீட்சை :*

| பாட இல. | விடயம் | காலம் (மணி) |
|---|---|---|
| 1 | 1 ஆம் பகுதி | 03 |
| 2 | 2 ஆம் பகுதி | 03 |
| 3 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் i | 03 |
| 4 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் ii | 03 |
| 5 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் iii | 03 |
| 6 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் iv | 03 |
| 7 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் v | 03 |
| 8 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் vi | 03 |
| 9 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் vii | 03 |
| 10 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் viii | 03 |
| 11 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் ix | 03 |
| 12 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் x | 03 |
| 13 | 3 ஆம் பகுதி - வினாப்பத்திரம் xi | 03 |

*இதன் பொருட்டு கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**குறிப்பு**.- இரண்டாவது வினைத்திறமைகாண் பரீட்சை விண்ணப்பதாரிகள் அமரவேண்டியது பகுதி 1 அல்லது பகுதி 2 வினாப்பத்திரம் இரண்டில் ஒன்றுக்கும், பகுதி 3 இன் இரு வினாப்பத்திரங்களுக்குமாகும். ஒரு வினாப்பத்திரத்துக்கு ஆகக்குறைந்தது 40% புள்ளிகளையாவது பெறல் வேண்டும்.

5. 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தையுடைய திறைசேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களப் பரீட்சை (பதவி உயர்வு மற்றும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை உட்பட) பரீட்சைகளுக்கும் தோற்றும் மொழி, உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியாகும். போட்டிப் பரீட்சையில்லாமல் நேரடியாக சேவையில் சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்க வேண்டியது உத்தியோகத்தர் சேவையில் சேர்வதற்கு தகுதி பெற்ற மொழி அல்லது அரசாங்க மொழியாகும்.

6. விண்ணப்பதாரிகளுக்கு கீழே தரப்பட்டுள்ள வினாப்பத்திரங் களுக்கு சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலத்தில் விடையளிப்பதற்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன :-

I. நிதி முறைகள்
II. நிருவாகம்
III. திணைக்களப் பிரமாணங்கள் I
IV. திணைக்களப் பிரமாணங்கள் II

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தல்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றிய பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பப்படிவங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய புள்ஸ்காப் தாளின் இருபக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட இரு பரீட்சைகளுக்கும் சமுகமளிப்பதானால் வெவ்வேறாக ஒவ்வொரு பரீட்சையின் பொருட்டும் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை

விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

10. விண்ணப்பப்படிவங்கள் 2007.08.10 திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ "கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், பேராதனை, ஆணையாளர் நாயகம்"இற்கு கிடைக்கக்கூடியதாக தி திணைக்களம்/அலுவலகம் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

11. பரீட்சை தினத்திற்கு குறைந்த பட்சம் ஏழு நாட்களுக்கு முன்னர் வரை பரீட்சார்த்தி ஒருவர் தமது அனுமதி அட்டையைப் பெறாதிருந்தால், அவரால் அது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்தல் வேண்டும். (தந்தி அனுப்பும் விலாசம்: பரீட்சை, கொழும்பு) என்ற விலாசத்திலுள்ள பரீட்சை ஆணையாளர் நாயகத்தோடு தாமதமின்றி தொடர்பு கொண்டு தனது அனுமதிப்பத்திரம் கிடைக்கவில்லையென்பதை பின்வரும் தகவல்களுடன் அறிவிக்க வேண்டும் :-

1. பரீட்சையின் பெயர் ;-

2. முழுப் பெயர் :-

3. முழுமையான தபால் விலாசம் :-

4. தபால் கந்தோரும், பதிவிலக்கமும் விண்ணப்பம் அனுப்பிய திகதியும் :-

அண்மையயிலுள்ளவர்கள் பரீட்சை ஆணையாளருடன் 'ஈ' கிளைத் தலைவர் மூலம் தொடர்பு கொள்ளும்படி ஆலோசனை கூறப்படுகின்றது.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளுக்கு இணங்கியொழுகத் தவறும் பரீட்சார்த்திகளால் பின்னர் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத்தொடர்புகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

13. அடையாள அட்டை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட 1971 ஆனி மாதம் 29 ஆந் திகதியிடப்பட்டதும் எஸ்ஈ 274 ஆம் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கை பரீட்சார்த்திகள் அனைவரினதும் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும்.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது:-

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக -

| | |
|---|---|
| முழுப் பரீட்சை | ரூபா 100.00 |
| ஒரு பாடம் | ரூபா 50.00 |

கட்டணங்கள் பரீட்சார்த்தியின் கையொப்பம் இடப்பட்டு பெறுமதி நீக்கம் செய்யப்பட்ட அரசிறை முத்திரைகளில் செலுத்தப்படல் வேண்டும்.

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள்.

எஸ். ஜே. பத்திரன,
செயலாளர்,
கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள அபிவிருத்தி அமைச்சு.
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 3,
2007.07. ..........

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பரீட்சைத் திணைக்களம் - இலங்கை**

*இலங்கை கால்நடை உற்பத்தி சுகாகதார சேவை உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை- 2006*

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----
(ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :-----

2. பிறந்த திகதி :-
ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----

3. (i) பதவிப் பெயர் :-----
(ii) திணைக்களத்தின் பெயர் :-----

4. அஞ்சல் முகவரி (அனுமதிப்பத்திரம் அனுப்பப்படுவதற்காக) :-

5. இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவையிலுள்ள உத்தியோகத்தராயின் அத்தகைய சேவைக்கு அவர் நியமிக்கப்பட்ட திகதி :-----

6. விண்ணப்பிக்கும் பரீட்சை (பொருத்தமற்றதை நீக்கிவிடுக) :-

(அ) முதலாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை :-----
(ஆ) இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை :-----

7. தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்) :--- அறிவித்தலின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் குறிக்கப்படல் வேண்டும் :-

(1) பாட எண் :----- பாடம் :-----
(2) பாட எண் :----- பாடம் :-----
(3) பாட எண் :----- பாடம் :-----
(4) பாட எண் :----- பாடம் :-----

8. உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம் :-----

9. (i) இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக :-----

(ii) அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :-----

10. செலுத்தப்பட்ட தொகை ரூபா........................

| முத்திரைக்கூடு |
|---|

மேலே கூறப்பட்ட விபரங்கள் சரியானவை என்றும் மேலே 10 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மொழிமூலம் பரீட்சைக்குத் தோற்ற உரித்துடையவரென்றும் நான் உறுதிமொழிகின்றேன்.

இவ்விண்ணப்பத்தில் ஒட்டப்பட்ட முத்திரைகள் பெறுமதியுள்ளவையென்றும் என்னால் பெறுமதி நீக்கம் செய்யப்படுவதற்கு முன்னர் பாவிக்கப்படாதவையென்றும் மேலும் உறுதியுரைக்கின்றேன்.

-----
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :-----

**திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

பரீட்சை ஆணையாளர் நாயகம், கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம், பேராதனை, ஆணையாளர் நாயகத்திற்கு ஊடாக முன்வைக்கப்படுகிறது.

இதனகத்து காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும் எட்டாம் பந்தியில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற அவர் தகைமையுடையவரென்றும் (கட்டணம் செலுத்தப்பட வேண்டியிராதவிடத்து நீக்கப்படலாம்) முத்திரைகள் முறையாக ஒட்டப்பட்டு பரீட்சார்த்தியால் பெறுமதி நீக்கம் செய்யப்பட்டது/ செய்யப்பட்டன எனவும் பரீட்சார்த்தியின் கையொப்பம் எனவும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

-----
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :-----

**பின்னிணைப்பு 'அ'**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை அலுவலர்களுக் கான முதலாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் பின்வரும் பாடங்கக்ளை கொண்டிருக்கும் :-

I. நிதி முறைகள்
II. நிருவாகம்
III. திணைக்களப் பிரமாணங்கள் I
IV. திணைக்களப் பிரமாணங்கள் II

I **நிதி முறை**.- நிதி என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

(அ) இலங்கை அரசாங்க நிதி ஒழுங்கு விதி, பகுதி 1 (10 ஆம் அத்தியாயம் நீங்கலாக)
(ஆ) நடப்பாண்டு மதிப்பீடுகள் - எடுத்துக்காட்டு அவற்றின் ஒழுங்குகள், அரசிறை தலைப்புகள் நிதி ஒதுக்கீட்டுச் சட்டங்கள்
(இ) கச்சேரிகள் ஊடாக விசேடமாக மேற்கொள்ளப்படும் கணக்குகள், சட்டம்

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்தி பெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீத்தைப் பெறல்வேண்டும்.

II. **நிருவாகம்**.- நிருவாகம் என்னும் பாடத்திலான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும் :-

(அ) அலுவலக மற்றும் வெளிக்கள நடவடிக்கை
(ஆ) தாபனக் கோவை அத்தியாயம் I, II, III, V, VI, VII, IX, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, உம் XLVIII.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்தி பெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீத்தைப் பெறல்வேண்டும் :

III. **திணைக்களப் பிரமாணங்கள்** .- திணைக்களப் பிரமாணம் தொடர்பான பரீட்சை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்:-

இப்பரீட்சை வினாத்தாள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கிய இரண்டு மணித்தியால வினாப்பத்திரமாகும்.

ஸ்பரிசத்துடன் தொற்றிப் பரவும் தொற்று நோய்க்கான சட்டம் மற்றும் திணைக்கள கட்டளை கால்நடை வைத்திய சேவைக்கு பொருத்தமான சுற்று நிருபங்கள்

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்தி பெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறல்வேண்டும்.

IV. **திணைக்களப் பிரமாணங்கள்** II.- பின்வரும் பாடங்களுக்கு 3 மணித்தியால வினாப்பத்திரம்:-

(1) மாதிரிகளை அனுப்புதல் பிரேத பரிசோதனை உள்ளிட்ட நோய் ஆய்வு உறுதி ஆய்வுகூட பரிசோதனை முறைகள், கர்ப்ப பரிசோதனை உள்ளிட்ட வெளிக்கள நோய் ஆய்வு உறுதி பரிசோதனைகள், விலங்குகளுக்கு ஏற்படும் தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்து, குருதி பாயம் (Sera) ஆகிய முற்காப்பு நடவடிக்கைகள்.

(2) செயற்கைமுறைச் சினைப்படுத்தல் செயல்முறையும், தொழில்நுட்பமும், இனப்பெருக்கத்தின் அடிப்படைத் தத்துவங்களும் கன்று வளர்ப்பும், அடைகாத்தல், குஞ்சு பொரித்தல், கோழிக் குஞ்சு வளர்ப்பு, கால்நடைகளுக்கான போஷணை உணவுப் பண்டம், பசுந்தீவனப் பயிர்ச் செய்கை, வெவ்வேறுபட்ட பயிர்கள், புற் செய்கை, உலர்புல், சைலேஜ் தயாரிப்பு, கால்நடைப் பராமரிப்பு என்பன.

(3) பால் உற்பத்தி, கிருமியளிக்கப்பட்ட பாலை போத்தல்களில் அடைத்து எடுத்துச் செல்லல், பால் சுகாதாரம் பாதுகாப்பு, பால் ஆடை பகுத்தல் உள்ளடங்கலாக பரிசீலனை செய்தல், பால் ஆடை நீக்கல், பட்டர் நெய் மற்றும் தயிர் உற்பத்தி.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் சித்தி பெறுவதற்கு மொத்தப் புள்ளிகளில் 40 சதவீதத்தைப் பெறல்வேண்டும்.

**பின்னிணைப்பு 'ஆ'**

இலங்கை கால்நடை உற்பத்தி சுகாதார சேவை அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகள் பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

**பகுதி** I - பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும் :-

2.1, 2.2, 4.1, 4.2, 5.2, 5.8,6.5, 7.2.1, 8.2, 8.2.2, 8.2.3, 8.3.1, 9.2, 9.4, 9.6, 9.7 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

**பகுதி** II- பின்வரும் பிரிவுகளில் இதற்கான பாடத்திட்டம் சேர்க்கப்பட்டிருக்கும்.

1.1.1, 1.1.4, 1.2.1, 3.2, 3.1.1, 3.1.2, 3.2.1, 10.1.1, 10.1,2, 10.1.3, 10.1.4, 10.1.6, 10.2.1, 10.2.8, 10.4.1 பகுதிகளில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

**பகுதி** III

வினாத்தாள் 1. தொற்றுநோயியல்
2. கால்நடை பொருளியல்
3. மிருக வைத்திய பொதுச் சுகாதாரம்
4. விவசாய விஸ்தரிப்பு
5. பரம்பரையியல் சினைப்படுத்தல்
6. விலங்கு உடற்றொலியலும் இனப்பெருக்கமும்
7. வீடமைப்பு முகாமைத்துவம்
8. விலங்குப் போசணை
9. பசும்புல் மற்றும் விலங்கு தீவனப் பயிர்
10. செயல்பாட்டு நுண்ணுயிர் இனவியலும் நீர்ப் பீடணவியலும்
11. மருத்துவ பயன்படுத்துகை நோயியல் ஒட்டுண்ணியியல்

இதற்குரிய விபரமான பாடத்திட்டம் பேராதனை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திடமும் மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர்களிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

**கவனிக்க**.- பரீட்சார்த்திகள் சித்தி பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திலும் மொத்தப் புள்ளிகளில் 40% பெறுதல் வேண்டும்.

7-406

**வளிமண்டலவியல் திணைக்களம்**

தொலைத்தொடர்புகள் மற்றும் ரேடார் தொழில்நுட்பவியலாளர் பதவிக்காக இலங்கைத் தொழினுட்ப சேவையின் II ஆம் வகுப்பின் 'ஆ' பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை

Competitive Examination for the Recruitment of Telecommunication & Radar Technician Class II Segment B of the Sri Lanka Technological Service-2007

வளிமண்டலவியல் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள இலங்கை தொழினுட்ப சேவையின் தொலைத்தொடர்புகள் மற்றும் ரேடார் தொழினுட்பவியலாளர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆண்/பெண் இரு சாரார்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் தகைமைகளைப் பெறுகின்ற விண்ணப்பதாரிகளில் திறமையை அடிப்படையாகக் கொண்டு தகைமையுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

3. இப்போட்டிப் பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் 2007, செத்தெம்பர் மாதத்தில் கொழும்பில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும்.

4. **சேவைக்கு ஆட்சேர்ப்பு முறை**.- வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 90% வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்படுவதுடன் அப்பதவிகளுக்காக அரசாங்க வர்த்தமானி அறிவித்தலொன்றின் மூலம் அல்லது பிரசித்த அறிவித்தலொன்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதன்மூலம் காட்டப்படுகின்ற திறமையை அடிப்படையாகக் கொண்டு நேர்முகப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 15/90 மற்றும் அதற்கு ஏற்புடையதாக வழங்கப்படக்கூடிய பொது நிருவாக சுற்றறிக்கைக்கு இணங்க இலங்கை தொழினுட்பவியலாளர் சேவையின் II ஆம் தரத்தின் 'ஆ' பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகிறது.

5. **கல்வி மற்றும் பிற தகைமைகள்**.-

5.1 (i) மொறட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழினுட்ப டிப்ளோமா (இலத்திரன் மற்றும் தொலைத்தொடர்புகளுடன்)

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் தொழினுட்ப பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற பொறியியற் டிப்ளோமா (இலத்திரன் மற்றும் தொலைத்தொடர்புகளுடன்)

அல்லது

(iii) உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியற் டிப்ளோமா (இலத்திரன் மற்றும் தொலைத்தொடர்புகளுடன்)

அல்லது

(iv) திறந்த பல்கலைக்கழகத்தின் மூலம் வழங்கப்படுகின்ற தொழினுட்ப டிப்ளோமா (இலத்திரன் மற்றும் தொலைத்தொடர்புகளுடன்)

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியினை சித்தியடைதல் பற்றிய தொடர்பான சான்றிதழ் (இலத்திரன் மற்றும் தொலைத்தொடர்புகளுடன்)

(vi) மேற்குறித்த தொழினுட்ப தகைமைகளுக்கு சமமானதென இலங்கை தொழிநுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற பிற தகைமைகள்.

5.2 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரர்கள் 18 வருடங்களுக்கு குறையாதவர் களாகவும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதா காது.)

5.3 விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாக இருத்தல் வேண்டும்.

5.4 விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுடையவர்களாகவும் சிறந்த தேகாரோக்கியமுடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

5.5 எல்லா விண்ணப்பதாரர்களும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி திகதிக்கு முன்னர் பதவிக்கான எல்லாத் தகைமைகளையும் கட்டாயமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.-இவ்வறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஏ4 அளவிலான கடதாசியின் ஒரு பக்கத்தை உபயோகித்துக் கொண்டு தொடர் இலக்கம் 01 முதல் 04 வரைக்கும் முதற் பக்கத்தில் உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் தமது கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும். முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2007.08.24 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலம் "பணிப்பாளர் நாயகம், வளிமண்டலவியல் திணைக்களம், பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07" என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்கள் இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "தொலைத்தொடர்புகள் மற்றும் ரேடார் தொழினுட்பவியலாளர் பதவி" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். ஏற்கனவே அரச/ மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பங்கள் அனுப்பப்படுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் அல்லது முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பப் பத்திரத்தின் புகைப்படப் பிரதியொன்றினை தன்வசம் வைத்துக் கொள்வது உகந்ததாகும்.

7. பரீட்சை அனுமதி அட்டை, பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் பரீட்சை நேர அட்டவணை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக் கொண்ட அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதி அட்டைகளை சமர்ப்பிக்கத் தவறுகின்ற எந்தவொரு விண்ணப்பதாரருக்கும் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டாது. பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்பட்டவுடன் பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்படும். பரீட்சைக்கு 7 நாட்களுக்கு முன்னர் அனுமதிப்படிவங்கள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திடம் பின்வரும் விபரங்களை அறிவித்தல் வேண்டும் :-

(1) முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதெலுழுத்துக்களுடன் பெயர் :----.
(2) முகவரி :----.
(3) விண்ணப்பத்தை பதிவு செய்து அனுப்பிய அஞ்சல் அலுவலகத்தின் பெயர் மற்றும் பதிவு இலக்கம் :----.
(4) பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் இலக்கம் மற்றும் இலங்கை வங்கிக் கிளையின் பெயர் :----.

8. எழுத்துமூல பரீட்சையின்போது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

9. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி உரியவாறு விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு போட்டிப் பரீட்சைக்காகத் தோற்றுவதற்கு இடமளிக்கப்படுகிறது. போட்டிப் பரீட்சைக்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் எனக் கருதப்படமாட்டாது. எழுத்துமூலப் பரீட்சையின்போது மேலான திறமையைக் காட்டியுள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லையென தெரிய வந்தால் அவர்கள் பதவி பெறுவதற்கு தகுதியற்றவர்களென கருதப்படுவார்கள்.

10. இவ்வறிவித்தலில் வெளியாகாத விடயங்கள் தொடர்பாகவும் பதவிகள் வழங்குதல் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வளிமண்டலவியல் திணைக்களத்துக்குரியதாகும்.

11. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம், அரசாங்கக் கல்லூரியொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர், வருடாந்தம் 2,37,060 ரூபாவுக்கு மேல் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தரொருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

12. **பரீட்சைக் கட்டணம்**.-பரீட்சைக் கட்டணமாக மீளச் செலுத்தப்படாத 300 ரூபா தொகையொன்று வளிமண்டலவியல் பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் இலங்கை வங்கியின், ரொரிங்டன் சுற்று வட்டக் கிளையின் இல. 70104532323311 என்ற கணக்கில் வரவு வைத்து எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட

மாட்டாது. பணம் கட்டிய பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக் கொள்வது உகந்ததாகும்.

13. **எழுத்துப் பரீட்சை.**-இப்போட்டிப் பரீட்சை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும். பரீட்சார்த்தி (விண்ணப்பதாரி) ஒருவர் பரீட்சையின் போது தோற்றுகின்ற எல்லா வினாத்தாள் களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். எழுத்து மூலப் பரீட்சை பின்வரும் வினாக்களைக் கொண்டதாகவிருக்கும் :-

(1) நுண்ணறிவுத் தேர்வுப் பரீட்சை
(2) தொழினுட்ப வினாத்தாள்

14. **பாடத்திட்டம்.**-

(1) நுண்ணறிவுத் தேர்வுப் பரீட்சை : (நேரம் 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100
பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான நியாயம் காணும் திறனையும் தரப்படும் தகவல்களிலிருந்து நன்கு ஊகித்துணரும் ஆற்றலையும் தீர்மானமெடுப்பதில் உள்ள திறனையும் மதிப்பிடும் வகையிலான வினாக்களைக் கொண்டதாகும்.

(3) *தொழில்நுட்ப வினாத்தாள்* : (நேரம் : 02 மணித்தியாலயம்) மொத்தப் புள்ளிகள் 100

அடிப்படை மின்சார போதனா முறை பகுதியளவு கடத்திகள் எண்முறை இலத்திரனியல் தரவு பரிவர்த்தனை தொர்பாடல் முறை என்பவற்றின் கீழ் பௌதீகவியல் மற்றும் இலத்திரனியல் தொடர்பான பரீட்சார்த்தியின் அறிவை கணிப்பீடு செய்வதற்கான வினாக்கள் அடங்கிய வினாத்தாள் ஒன்று

15. **தெரிவு செய்யும் நடவடிக்கை முறை.**-தகைமை பெறுவதற்காக ஒரு பாடத்தில் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேல் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகளில் மேலான புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளை (விண்ணப்பதாரிகளை, நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து) தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. மேற்படி 05 இன் கீழான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மற்றும் பரீட்சையில் பாடங்கள் இரண்டிலும் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட பரீட்சார்த்திகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் II வகுப்பின் (ஆ) பிரிவில் நியமிக்கப்படுவார்கள்.

16. **மருத்துவப் பரிசோதனை.**- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தான் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய தேகாரோக்கியம் உடையவரென எண்பிக்கும் பொருட்டு மருத்துவ பரிசோதனையொன்றுக்கு உட்பட வேண்டுமென்பதுடன் மருத்துவ பரிசோதனையில் தகுதியற்றவரென தெரியவரும் பட்சத்தில் அவர்கள் தகைமையற்றவர்கள் எனக் கருதப்படுவர்.

17. **சம்பள அளவுத் திட்டம்.**-(6/2006 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் MT2-2006 இன்படி) ரூபா 14, 140-10x140-11x150-6x210-14x290- ரூ. 22,510 (மாதாந்தம்). ரூபா 14, 560 சம்பளத்திற்கு முன் வினைத்திறமைகாண் தடையுடையது.

18. **சேவை நிபந்தனைகள் :-**

18.1 இப்பதவி நிரந்தரமானது, பங்களிப்பு ஓய்வூதிய நிதியத்தின் கீழ் பங்களிப்பு ஓய்வூதியத்திற்கு தகுதியுடையவராவர். 2003.01.01 ஆந் திகதிக்கு ஓய்வூதிய சம்பளம் உடைய பதவி வகிக்கும் ஒருவர் இப்பதவிக்கு இணைத்துக் கொள்வாராயின் அவ்வாறானவர் தொடர்ந்தும் ஓய்வூதிய சம்பள யாப்பின் கீழ் ஓய்வூதியத்திற்கு உரித்துடையவராவதுடன், விதவை/தபுதாரர் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு நிதி செலுத்துதல் வேண்டும்.

18.2 தெரிவு செய்யப்படுபவர்கள் தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் திணைக்களத்தின் கட்டளைகள் மற்றும் ஒழுங்குவிதிகள் அரசாங்கத்தினால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள மற்றும் காலத்துக்குக் காலம் வழங்கப்படுகின்ற பிற கட்டளைகளுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கியொழுகுதல் வேண்டும்.

18.3 அரச மொழியல்லாத மொழி மூலமொன்றினால் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 03 ஆண்டிற்குள் அரசகரும மொழிப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். குறிப்பிட்ட காலத்துக்குள் பரீட்சையில் தேர்ச்சிபெற தவறியமை அடுத்த சம்பள உயர்வு நிறுத்தப்படுவதற்குக் காரணமாகும்.

18.4 தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 10 தொடக்கம் 12 வரையிலான பந்திகளின் ஏற்பாடுகள் ஏற்புடைய தாகின்றன.

**விசேடம்**

(i) கடமை நேரங்கள் எப்போதும் பொதுவாக வேலை செய்யும் நேரங்கள் அல்ல என்பதுடன் இரவு பகல் இரண்டிலும் சனி, ஞாயிறு மற்றும் அரச விடுமுறை தினங்களிலும் ஏற்படும் வேலை பதிவேடுகளின் படியும் கடமைகளை செய்ய நேரிடும்.

(ii) அவர்கள் தீவில் எந்தவொரு பாகத்திலும் கடமை புரிதல் வேண்டும்.

ஜீ. எச். பீ. தர்மரத்ன,
பணிப்பாளர் நாயகம்,
வளிமண்டலவியல் திணைக்களம்.

வளிமண்டலவியல் திணைக்களம்,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 12.
2007.07.06. ஆந் திகதி.

மாதிரி விண்ணப்பப்படிவம்

பரீட்சை இலக்கம் [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

**தொலைதொடர்புகள் மற்றும் ரேடார் தொழில்நுட்வியலாளர் பதவிக்காக இலங்கை தொழினுட்பச் சேவையின் 11 ஆம் வகுப்பின் 'அ' பிரிவுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2007**

COMPETITIVE EXAMINATION FOR THE RECRUITMENT OF TELECOMMUNICATION & RADAR TECHNICIAN CLASS II SEGMENT B OF THE SRI LANKA TECHNOLOGICAL SERVICE-2007

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :-
சிங்களம் - 2
தமிழ் - 3 [ ]
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்).

1. (அ) முதலெழுத்துக்களை பின்னால் இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(உ-ம் : SILVA.A.B.C)
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் நிரப்பப் படுதல் வேண்டும்.)

(ஆ) முதலெழுத்துக்களை பின்னால் இட்டு முதலெழுத்துக்க ளுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) திரு/திருமதி/செல்வி :-----.

(இ) முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-----.

(ஈ) ஆங்கிலத்தில் :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் நிரப்பப் படுதல் வேண்டும்)

2. தேசிய அடையாள அட்டை இல. :-

3. பால் :-
ஆண் -0
பெண் -1
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4. நிரந்தர முகவரி :-
(அ) (சிங்களத்தில்/தமிழில்) :-----.

(ஆ) ஆங்கிலத்தில் :-----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில் நிரப்பப் படுதல் வேண்டும்)

(இ) அனுமதி அட்டைகளை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-----.

(ஈ) நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.

(உ) பிரதேச செயலாளர் பிரிவு :-----.

(ஊ) தொலைபேசி இலக்கம் :-----.

5. (அ) பிறந்த திகதி :-
ஆண்டு :-----, மாதம் :-----, திகதி :-----.

(ஆ) 2007.08.24 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

6. விவாகமானவரா/விவாகமாகாதவரா என்பது :-
விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

7. இனம் :-
சிங்களம் - 1
தமிழ் - 2
இந்தியத்தமிழ் - 3
முஸ்லிம் - 4
பிற - 5
(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

8. கல்வித் தகைமைகள்:-
(அ) க.பொ.த. (சா.த.) பரீட்சை :-
முதல் தடவை
ஆண்டு :-----.
சுட்டெண் :-----.
இரண்டாம் தடவை
ஆண்டு :-----.
சுட்டெண் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |

(ஆ) க.பொ.த. (உ.த.) பரீட்சை :-
ஆண்டு :-----. சுட்டெண் :-----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |

9. தொழில் தகைமைகள்/தொழிநுட்ப தகைமைகள் :
9.1 பெறப்பட்ட பட்டம்/டிப்ளோமா :-----.

9.2 சம்பந்தப்பட்ட பட்டம்/டிப்ளோமா வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் :-----.

9.3 அப்பட்டம்/டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி :-----.

10. பிற தகைமைகள் :-----.

11. நீர் ஏதேனும் குற்றத்துக்காக நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுள்ளீரா? ஆம்/இல்லை. ஆமெனில் விபரங்களைத் தருக.

12. விண்ணப்பதாரர் தற்பொழுது அரச அல்லது மாகாண அரச சேவையில் தொழில் புரிபவராயின் பதவிப் பெயரும், திணைக்களத்தின் பெயரும், முகவரியும் :-----.

13. விண்ணப்பதாரர் இதற்கு முன்பு அரச/மாகாண அரச சேவையில் பணிபுரிந்து பின்னர் விலகியிருப்பவராயின் அவ்வாறு விலகுவதற்கான காரணம் ? :-----.

14. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் தொடர்பான தகவல்கள் :
14.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கியின் பெயர் :-----.
14.2 வங்கிக் கிளையின் பெயர் :-----.
14.3 பணம் செலுத்திய திகதி :-----.

(பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தன்வசம் வைத்துக் கொள்ளவும்).

15. **விண்ணப்பதாரரின் உறுதியுரை:**

இவ்விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் நான் அறிந்தவரை சரியானவை எனவும் உண்மையானவை எனவும் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்பரீட்சையின் நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரென தெரியவந்தால் எனது விண்ணப்பத் தன்மையை இரத்துச் செய்வதற்கும் அல்லது நியமனம் பெற்றதன் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும்

நானறிவேன். மேலும் இந்த பரீட்சை தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களுக்கு கீழ்ப்படிவேனென்றும் உறுதியளிக்கின்றேன்.

..................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

16. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்:**

இவ்விண்ணப்பப் பத்திரத்தை முன்வைக்கும் திரு./திருமதி/செல்வி .................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ............ ஆந் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

| | |
|---|---|
| ...................... | ...................................... |
| விண்ணப்பதாரரின் மாதிரிக் கையொப்பம். | கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம். |

அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

(அரச அல்லது மாகாண அரச சேவையில் தற்பொழுது சேவையில் ஈடுபட்டிருப்பவராயின் பின்வரும் அத்தாட்சி திணைக்களத் தலைவரினால் செய்யப்படுதல் வேண்டும்.)

7-425

## அறிவித்தல்

### இலங்கை வெளிநாட்டுச் சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை – 2007

இலங்கை வெளிநாட்டு சேவையின் III ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்களைக் கோரும், 2007, யூன் 08 ஆந் திகதிய, 1,501 ஆம் இலக்க இலங்கை வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மறுபரிசீலனை செய்யப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் விரைவில் பிரசுரிக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

பாலித ரீ. பீ. கொஹொன,
செயலாளர்,
வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
"குடியரசுக் கட்டிடம்",
கொழும்பு 01.
2007, யூலை 05.

7-455

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.